ஓம் ஸ்ரீ சாயிராம்
பிரசாந்தி சந்தேஷ்
வினா விடை நேரம் வினா எண் 306

# தலைப்பு: தூய்மை மற்றும் தியாகம்
நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம்

சாரின் சத்யோபநிஷத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வி பதில் பகுதி. 1, பக்கங்கள் 98 முதல் 103 வரை.

கேள்வி: ஸ்வாமி நம் நிறுவனங்களிலே படிக்கின்ற மாணவர்கள் ஆசிரியர்கள் மருத்துவர்கள் பணி செய்கிறவர்கள்
என அனைவருமே வெண்ணிற ஆடை அணிகின்றோம்.
இதன் காரணம் என்ன என்று தெளிவுபடுத்த வேண்டுகிறோம் ஸ்வாமி

பகவானின் பதில்:
வெள்ளை ஆடை தூய்மையை குறிக்கின்றது.
தூய வெள்ளை ஆடையை சுத்தமான கண்ணாடியுடன் ஒப்பிடலாம்.
கண்ணாடியின் மீது தூசு படிந்தால் உங்கள் உருவத்தை அதில் உங்களால் காண இயலாது.
அது போல் உங்களின் புத்தியும் ஓர் வெண்ணிற ஆடை தான்.அந்த புத்தி மாசடையாமல் இருந்தால்தான்
உங்களிடமுள்ள குறைகளை இனம்கண்டு பகுத்தறிந்து அவற்றை உங்களால் களைய முடியும்.

ஆனால் இன்றோ மற்றவர்களின் குறைகளை கண்டுபிடிப்பதில் ஆர்வமுடையவர்களாக இருக்கும் நீங்கள் உங்களிடம் உள்ள குறைகளை காண்பதேயில்லை.

கண்ணாடி உங்களை நோக்கி இருக்கும் போது அதில் உங்கள் உருவம் மட்டுமே தெரியும்
அதை அடுத்தவரை நோக்கி திருப்பினால் அவர் உருவம் தானே தெரியும்.
இதைபோல உங்கள் உடல் என்னும் கண்ணாடியில் உள்ள மனமானது எப்போதும் மற்றவர்களின் குறைகளை கண்டுபிடிப்பதிலேயே ஆர்வமுடன் உள்ளது.

வெண்ணிற ஆடையில் ஒரு சிறு அழுக்கு பட்டாலும் அது பளிச்சென்று தெரியும்.
மற்ற ஆடைகளில் மாசு சட்டென்று தெரிவதில்லை.
தங்களிடமுள்ள குறைகளை நீங்கள் உடனடியாக களைவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.
மற்றவர்களிடமுள்ள நல்ல வற்றை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும்.
உங்களிடமுள்ள நல்லவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
மாறாக உங்களின் தீய பழக்கங்களை மற்றவர்களுக்கு கற்று கொடுப்பது பாவமாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி நாங்கள் கோவில்களுக்கும் ஆலயங்களுக்கும் தவறாமல் செல்கின்றோம்.
சமய சம்பிரதாயங்களை கடைபிடிக்கின்றோம்.
இருப்பினும் நடைமுறை வாழ்கையில் விரும்பதகுந்த மாற்றங்களை கொண்டு வர எங்களால் முடியவில்லையே.
இதற்கான காரணம் என்ன ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
பூஜை வழிபாடு தியானம் பஜனை இவை எல்லாமே நல்ல நடவடிக்கைகள்தான்.
ஆனால் இவற்றையெல்லாம் ஆன்மீக சாதனைகள் என்று கூறி விட முடியாது.
இவையெல்லாம் உங்கள் நேரத்தை புனிதமான வழியேலே கழிக்க உதவுகின்றன.
ஆனால் உண்மையான ஆன்மீக சாதனை என்பது ஆத்ம விசாரம் மட்டுமே.
ஆத்ம விசாரித்ததில் ஈடுபடுபவர் தான் உடலல்ல மனமுமல்ல புத்தியுமல்ல தான் ஆத்மா மட்டுமே என்ற உணர்வுடன் ஈடுபட வேண்டும்.
அத்மாவிற்கு நாமமோ ரூபமோ கிடையாது.
அது இரட்டை தன்மையை கடந்து மாற்றமில்லாத நிலையான ஒன்றாகும்.
அந்த ஆத்மாவை அறிந்து கொள்வதே உண்மையான ஆன்மீக சாதனை ஆகும்.
இந்த ஆத்மாவே சிருஷ்டி அனைத்திலும் நீக்கமற நிறைந்திருக்கின்ற ப்ரம்மண் என்கின்ற தெய்வீகமாகும்.

இகோ வாஸி ஸர்வ பூதாத்மா என்ற பேருண்மையை உணர செய்வதே உண்மையான ஆன்மீக
சாதனை ஆகும்.

சமய சடங்குகளை செய்வது மட்டுமே ஆன்மீக சாதனை ஆகிவிடாது.
நீங்கள் இறைவனின் படத்தின் முன்பு உணவை வைத்து நைவேத்தியம் செய்கின்றீர்கள்.
பின்னர் அதை நீங்களே சாப்பிடுகின்றீர்கள். இறைவன் அதை உண்பதில்லை.
கடவுள் அதை உண்ண ஆரம்பித்தால் ஒருவரும் நைவேத்தியமே செய்ய மாட்டார்கள்.

உண்மையில் தியாக மனப்பான்மையே உயர்ந்த சாதனை ஆகும்.
உங்களுடைய நேரம் சக்தி திறமை பொருள் இவை அனைத்தையும் இறைவனுக்காக அர்பணிக்க வேண்டும்.
தியாகமே உண்மையான யோகமும் ஆகும்.

தூய அன்பே தியாகமாக வெளிப்படுகிறது.தியாகம் செய்வதற்கும் விட்டு கொடுப்பதற்கும் தயாராக இல்லாத அன்புவெறும் சுயநலமே ஆகும்

நீங்கள் உலகியலாக கொண்டுள்ள பற்றனைத்தையும் தியாகம் செய்யுங்கள்.
தீய எண்ணங்களை தியாகம் செய்யுங்கள்.
தறிகெட்டு ஓடும் உணர்வுகளை அழித்தொழியுங்கள்.
தியாகமே தெய்வீகமாகும்.
பிறருக்காக தியாகம் செய்வதன் மூலம் உங்களுக்கு நீங்களே உதவி கொள்கிறீர்கள்.
நீங்கள் உடல் அல்ல
தெய்வீக ஆத்மா என்பதை உணர முயலுங்கள்.

ஒரு முறை நதியில் விழுந்து தத்தளித்து கொண்டிருந்த பசு மாட்டினை ஒரு யோகி காப்பாற்றினார்.
நல்ல வேளை நீங்கள் பசுவை தக்க சமயத்தில் காப்பாற்றி உதவினீர்கள் என்று அங்கிருந்தவர்கள் அவரை பாராட்டியபோது அந்த யோகி சொன்னார் இதை நான் அந்த கன்றுக்காக செய்யவில்லை.
எனக்காக செய்து கொண்டேன்.
இதை செய்ததன் மூலம் நான் ஆனந்த்தை அனுபவிக்கிறேன் என்றார்.

தியாகம் என்பது கட்டுபாடுகளையும் சட்டங்களையும் கடந்த ஒன்றாகும்.

ஒரு தாய் தன் குழந்தையின் மீது கொண்ட அன்பினால் குழந்தைக்காக தன்னுடைய சௌகரியங்களை தியாகம் செய்ய தயராக இருக்கின்றார்.
விருஷங்கள் சுவையான பழங்களை மனிதர்களுக்காக அளிக்கின்றன.தன்னுடைய பழங்களை அவை தானே உண்பதில்லை.
நதிகள் நீரை கொடுத்து மனிதனுடைய தாகத்தை தணிக்கின்றன.
பசு தன்னுடைய ரத்தத்தை பாலாக கொடுத்து மனிதனுக்கு போஷாக்கு மற்றும் ஆரோக்கியத்தை அளிக்கின்றது.
இவ்வாறான தன்னலமற்ற தியாகமே சடங்கு சம்பிரதாங்களைவிட மேலானதாகும்.

பிறருக்கு உதவுகின்ற சேவை பணிகளில் ஈடுபடும் கரங்கள் பிரார்த்தனை செய்யும் உதடுகளைவிட மேலானது.
அதாவது களத்தில் இறங்கி துயர் துடைக்கும் பணிகளில் ஈடுபடுவது உயர்ந்த சேவையாகும்.
பக்தி என்று கடவுளின் பால் கொள்கின்ற அன்பு தியாகமாக வெளிப்பட வேண்டும்.தியாகமே கடவுளை சென்றடைகின்ற ப்ரேம யோகமாகும்.இந்த ப்ரேம யோகத்தை பின்பற்றுவதால் பக்தியும் இறை நம்பிக்கையும் மேலும் அதிகரித்து வேரூன்றி விடும்.
ஆத்ம விசாரத்தில் ஈடுபட்டு தெய்வீகத்தை அனுபவியுங்கள்
தியாகத்தின் மூலம் பெறப்படுகின்ற ஞானமே கைவல்யம் எனப்படுகின்ற மோட்சமாகும்.இது உடல் மற்றும் மனதினை கடந்து செய்கின்ற சாதனையாகும்.
இந்த சாதனையே உங்களுக்கு தெய்வானந்தத்தை ஆத்மானந்தத்தை பிரம்மானந்தத்தை பெற்று தர வல்லது.

அனைவருக்கும் நன்றி
மீண்டும் ஒரு முறை நம் ஸ்வாமியின் சத்சங்கத்திலே சந்திப்போம்
ஜெய் சாயிராம்